நாள்:20.01.2017

# மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் அறிக்கை – 20.1.17

...

தமிழர்களின் பண்டையநாகரிகம்,கலாச்சாரம் ஆகியவற்றைபிரதிபலிக்கும் ஜல்லிக்கட்டுஎவ்விதஇடையூறும் இன்றி நடத்தப்படவேண்டும் என்பதேஅனைத்துதமிழர்களின் ஒட்டுமொத்தகருத்தாகும். 2014–ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுநிகழ்ச்சிக்குஉச்சநீதிமன்றம் ஒட்டுமொத்ததடைவிதித்து தீர்ப்பளித்தபின்னர், அந்தத் தீர்ப்பைஎதிர்த்து தமிழகஅரசுதாக்கல்செய்தமறு ஆய்வு மனுவினைஉச்சநீதிமன்றம் தள்ளுபடிசெய்துவிட்டது.

ஜல்லிக்கட்டுநிகழ்ச்சிநடத்திடஏதுவாக,சட்டதிருத்தங்களைமத்தியஅரசுமேற்கொள்ளவேண்டும் எனமத்தியஅரசைபுரட்சித்தலைவிஅம்மாஅவர்களும், தமிழகஅரசும் தொடர்ந்து வற்புறுத்தியதன் காரணமாக,மத்திய சுற்றுச் சூழல்மற்றும் வனத்துறைஅமைச்சகம் அறிவிக்கைஒன்றை 07.01.2016 அன்றுவெளியிட்டது. இந்தஅறிவிக்கைக்குஎதிராகபல்வேறுஅமைப்புகள்உச்சநீதிமன்றத்தில்வழக்குகளைதாக்கல்செய்தன.இந்தஅறிவிக்கைக்குஉச்சநீதிமன்றம் இடைக்காலதடையினைவிதித்தது. இந்தவழக்குஉச்சநீதிமன்றத்தில்வாதிடப்பட்டு, தீர்ப்பு உச்சநீதிமன்றத்தால்ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில்இந்த ஆண்டு ஜல்லிக்கட்டுநிகழ்வுநடத்திடஏதுவாகமத்தியஅரசுஅவசரச்சட்டம் ஒன்றைபிறப்பிக்கவேண்டும் என்றுமாண்புமிகுபாரதப்பிரதமர் அவர்களையும்,மத்தியஅரசையும் நான் வலியுறுத்திவந்துள்ளேன்.

இது தொடர்பாகமாண்புமிகுபாரதப்பிரதமர் அவர்களைநேற்று (19.01.2017) அவரதுஇல்லத்தில்சந்தித்து, மத்தியஅரசுஅவசரச்சட்டம் ஒன்றைபிறப்பிக்கவேண்டும் எனவலியுறுத்திக்கேட்டுக்கொண்டேன்.

எனதுகருத்துகளைபரிவுடன் கேட்டுக்கொண்டமாண்புமிகுபாரதப்பிரதமர் அவர்கள்,இந்தபிரச்சனையில்தமிழகமக்களின்உணர்வுகளுக்குமதிப்பளிப்பதாகத் தெரிவித்தார்கள்.

**மத்தியஅரசின்அறிவிக்கைக்குஎதிராகதொடரப்பட்டவழக்கில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைஎதிர்நோக்கியுள்ள நிலையில்,மாண்புமிகுபாரதப்பிரதமர் அவர்கள்தமிழ்நாடுஅரசுசட்டரீதியாகஎடுத்திடும் நடவடிக்கைகளுக்குமத்தியஅரசுஉறுதுணையாக இருக்கும் என்றஉத்தரவாதத்தைஅளித்தார்.**

**இதனைத் தொடர்ந்து,நேற்றுபுதுடெல்லியிலேயே தங்கி, ஜல்லிக்கட்டுநடத்திடவழிசெய்யும் வகையில்மத்தியஅரசின்மிருகவதைதடுப்புச்சட்டத்தில்மாநிலஅளவில்திருத்தங்கள்மேற்**

கொள்வது பற்றி சட்டவல்லுநர்கள்மற்றும் அரசுஉயர் அதிகாரிகளுடன் விவாதித்தேன். அதன் அடிப்படையில்,மத்தியஅரசின்மிருகவதைதடுப்புச் சட்டத்திற்குமாநிலதிருத்தம் ஒன்றைகொண்டுவரமுடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தசட்டத்திருத்தத்தினை, ஒருஅவசரச்சட்டமாகபிறப்பிக்கவும் முடிவுஎடுக்கப்பட்டது.இந்தியஅரசமைப்புச் சட்டத்தின்படி, இந்தவரைவுஅவசரச்சட்டம் மத்தியஅரசின் உள்துறைக்குஅனுப்பப்பட்டு, மத்தியஅரசின் பரிந்துரையுடன், மேதகுஇந்தியகுடியரசுத்தலைவருக்குஅனுப்பப்படவேண்டும். மேதகுஇந்தியகுடியரசுத் தலைவர் இதில்உத்தரவுபிறப்பித்து,அதன் அடிப்படையில்மாநிலஆளுநர் அவசரச்சட்டம் பிறப்பிக்கஇயலும்.

இத்தகையவரைவுஅவசரச்சட்டம்,நேற்றேபுதுடெல்லியில்இருந்தபடியேதயார் செய்யப்பட்டு,மத்தியஉள்துறைஅமைச்சகத்திற்கு, இன்று காலைதமிழகஅரசுஅதிகாரிகளின் மூலம் அனுப்பிவைத்துள்ளேன். மத்தியஅரசில்இதற்கானதொடர் பணிகளைமேற்கொள்ளதமிழ்நாடுஅரசின் உயர் அதிகாரிகளைபணித்துள்ளேன்.மேதகுஇந்தியகுடியரசுத் தலைவரின் உத்தரவுமற்றும் மாண்புமிகுஆளுநர் அவர்களின் ஒப்புதல்பெறப்பட்டு, இந்தஅவசரச்சட்டம் இன்னும் ஓரிருதினங்களுக்குள்பிறப்பிக்கப்படும். மாண்புமிகுபாரதப்பிரதமர் உறுதியளித்தபடி,அதற்கான முழு ஒத்துழைப்புமத்தியஅரசிடமிருந்து கிடைக்கும்.

எனவே, ஜல்லிக்கட்டுக்கானதடைநீக்கப்பட்டு, தமிழகத்தில் ஜல்லிக்கட்டுஓரிருதினங்களில்நடைபெறஉள்ளநிலையில், போராட்டத்தில்ஈடுபட்டுள்ளபொதுமக்கள், மாணாக்கர்கள், பல்வேறுஅமைப்புகளைச் சேர்ந்தவர்கள்ஆகியோர் தங்களதுபோராட்டங்களைஉடனடியாகக்கைவிடவேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஓ.பன்னீர்செல்வம்

தமிழ்நாடுமுதலமைச்சர்